# ஏற்றம் தரும் ஏந்தல் கத்திரி அரை ஏக்கரில் 10 டன்



அந்தக் கத்திரி இந்தக் கத்திரி என்று வகை வகையாக வீரிய ரகம் மற்றும் ஒட்டு ரகக் கத்திரிகள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், அவையெல்லாம் நாட்டுக் கத்திரி ரகங்களின் சுவைக்குத் துளியும் ஈடாகாது என்பதுதான் உண்மை. நாட்டுக் கத்திரி ரகங்களின் விலை எப்போதுமே சற்று கூடுதலாக இருப்பதே அதற்கு சாட்சி அதனாலேயே சந்தையிலும் அவற்றுக்குத் தனி கிராக்கிதான்

விளையும் பகுதியின் பெயரைக் கொண்டேதான் பெரும்பாலும் நாட்டுக் கத்திரிகள் அழைக்கப்படுகின்றன. பவானி, இலவம்பாடி, கொட்டாம்பட்டி, பொள்ளாச்சி, பொய்யூர் என்ற அடுக்கிக் கொண்டே போகலாம் அந்த வரிசையில் வரும் ஏந்தல் எனும் ரகத்தை, தொடர்ந்து ரசாயன முறையில் சாகுபடி செய்து வரும் திருவண்ணாமலை மாவட்டம், ஏந்தல் கிராமத்தைச் சேர்ந்த ராயர், அதைப் பற்றி உருகி உருகிப் பேசுகிறார்.

வழக்கமாக நாட்டுக் கத்திரி ரகங்களில் ஏக்கரக்கு 5 டன் முதல் 10 டன் அளவில்தான் சராசரி மகசூல் கிடைக்கும். ஆனால், ஏந்தல் ரகத்தில் 20 டன் வரை மகசூல் கிடைக்கும் என்பதுதான் கூடுதல் சிறப்பு.

**நாட்டுக் கத்திரிக்குக் கூடுதல் விலை:**

காலைவேளையில் தோட்டத்தில் காய் பறிப்பில் ஈடுபட்டிருந்த ராயர் கூறுவதாவது. எனக்கு ஒரு ஏக்கர் நிலம் இருக்கு. அதுல அரை ஏக்கர்ல எப்பவுமே கத்திரி சாகுபடிதான். மீதி அரை ஏக்கர்ல தண்ணி இருப்பைப் பொருத்து நெல், கடலை, எள்ளுனு மாத்தி மாத்தி சாகுபடி

செஞ்சுக்குவேன. எங்க ஏந்தல் கத்திரிக்காய் நல்ல ருசியா இருக்கும். அதனால கிலோவுக்கு ரெண்டு ரூபா கூடுதலா விலை கிடைக்கும். அதனால எங்க பகுதியில் நிறைய பேர் விடாம தொடர்ந்து கத்திரி சாகுபடி பண்றாங்க. அதுல நானும் ஒருத்தன்.

**அரை ஏக்கருக்கு 200 கிராம் விதை:**

ஏந்தல் ரகக் கத்திரியை சாகுபடி செய்ய தை மற்றும் ஆடிப் பட்டங்கள் ஏற்றவை. வடிகால் வசதியோடு இருக்கம் அனைத்து வகை மண்ணிலும் கத்திரி நன்கு வளரும். குறிப்பாக, ஏந்தல் ரகம் உப்புநீரிலும் தாக்குப் பிடித்து வளரும். நாற்று உற்பத்தி செய்துதான் நடவு செய்ய வேண்டும். நன்றாக முற்றிப் பழுத்த காய்களில் இருந்து விதைகளைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். பிறகு இரண்டு அடி அகலம், மூன்று அடி நீளத்தில் மூன்று பாத்திகள் எடுத்து களைகளை நீக்க வேண்டும். இரண்டு கூடை எரு, ஒரு கிலோ டி.ஏ.பி.ஆகியவற்றைக் கலந்து பாத்திகளில் பரப்பி, நிலத்தை நன்றாகக் கிளறி சமப்படுத்த வேண்டும். பிறகு, பாத்திகளின் மீது 200 கிராம் கத்திரி விதையைத் தூவி, வாழைச் சருகு அல்லது தென்னை மட்டையால் மூடி வைத்து, தினமும் பூவாளியால் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

**45 நாட்களில் நாற்று:**

12 முதல் 15 நாளில் முளைத்துவிடும். பிறகு, மட்டைகளை அகற்றிவிட வேண்டும். களைகள் இருந்தால் கைகளால் நீக்கிவிட வேண்டும். 25-ம் நாள் அரைக் கிலோ டி.ஏ.பி. 200 கிராம் கார்போஃப்யூரான் பூச்சிக்கொல்லிக் குருணை ஆகியவற்றைக் கலந்து பாத்திகளில் இட்டுத் தண்ணீர்விட வேண்டும் 45ம் நாளுக்கு மேல் நாற்றுகளை எடுத்து நடவு செய்யலாம்.

**குருத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் சேற்று உழவு:**

நாற்றுத் தயாராகும் சமயத்திலேயே நடவுக்கான நிலத்தையும் தயார் செய்து வைத்துவிட வேண்டும். அரை ஏக்கர் நிலத்துக்கு நிலத்துக்கு, 5 டன் எரு என்ற கணக்கில் கொட்டிக் கலைத்து, தண்ணீர் கட்டி, இரண்டு சால் சேற்று உழவு செய்து, 20 நாட்கள் காயவிட வேண்டும். இப்படிச் செய்யும்போது குருத்துப் பூச்சிகளின் தாக்குதல் குறைகிறது. நடவுக்கு சில நாட்களுக்கு முன்பாக, களை நீங்கும் அளவுக்கு இரண்டு சால் உழவு செய்து, இரண்டு அடி அகலத்துக்கு நீள நீளமாகப் பார் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாருக்கும் இடையில் ஓர் அடி இடைவெளிவிட வேண்டும்.

பார்களுக்கு குறுக்கே பத்தடிக்கு ஒன்று என்ற விகிதத்தில் வாய்க்கால்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ஓரடி இடைவெளியில் ஒவ்வொரு நாற்று:**

பிறகு, நிலத்தில் தண்ணீர் கட்டி பாரின் ஒரு பக்கத்தில் மட்டும் ஓர் அடி இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக நடவு செய்ய வேண்டும். மறுநாள் தண்ணீர் கட்டி அப்படியே நிலத்தைக் காய விட வேண்டும். (களி மண்ணாக இருந்தால் 10 நாட்கள் செம்மண் வகை நிலமாக இருந்தால், 5 நாட்கள் காயவிட வேண்டும்). பிறகு, தண்ணீர் கட்ட வேண்டும். அதன் பின் ஈரப்பதத்தைப் பொறுத்து, வாரம் ஒரு தண்ணீர் பாய்ச்சினாலே போதும்.

**அறுபதாம் நாளில் இருந்து அறுவடை:**

நடவு செய்த 15ம் நாளில் முதல் களை எடுக்க வேண்டும். பிறகு, 25 கிலோ யூரியா, 1 கிலோ கார்போஃப்யூரான் குருணை ஆகியவற்றைக் கலந்து ஓர் இரவு வைத்திருந்து, ஒவ்வொரு செடியின் தூருக்கும் ஒரு கைப்பிடி அளவு வைத்து மண் அணைத்துவிட வேண்டும். 30-ம் நாள் இரண்டாம் களை எடுக்க வேண்டும். அதன் பிறகு, பெரும்பாலும் களைகள் வளராது. ஒன்றிரண்டு தென்பட்டால் மாதம் ஒரு முறை அவற்றை நீக்கிவிட வேண்டும்.

45ம் நாள் 25 கிலோ டி.ஏ.பி. 1 கிலோ கார்போஃப்யூரான் குருணை ஆகியவற்றைக் கலந்து தூருக்குத் தூர் வைத்து மண் அணைத்து விட வேண்டும். இடைப்பட்ட நாட்களில் பூச்சித் தாக்குதல் இருந்தால், உரிய பூச்சிக்கொல்லிகளை வாங்கித் தெளிக்க வேண்டும்.

45ம் நாளுக்கு மேல் பூவெடுத்து, பிஞ்சு வைக்க ஆரம்பிக்கும். 60ம் நாளுக்கு மேல் காய்களைப் பறிக்க ஆரம்பிக்கலாம். அதன் பிறகு, மாதம் ஒரு முறை 50 கிலோ டி.ஏ.பி. 50 கிலோ பொட்டாஷ், 25 கிலோ வேப்பம்பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து, ஓர் இரவு வைத்திருந்து, ஒவ்வொரு செடிக்கம் தூர்ப்பகுதியில் வைத்து தண்ணீர் கட்ட வேண்டும்.

**ஏழு மாதங்கள் வரை அறுவடை:**

மகசூல் மற்றும் வருமானம் பற்றிப் பேசிய ராயர் ஒரு நாள் விட்டு ஒரு நாள்னு தொடர்ந்து ஏழு மாசம் வரைக்கும் காய் பறிக்கலாம். பறிப்புக்கு 120 கிலோ வரை கிடைக்கும். ஏழு மாசத்துல மொத்தம் 105 பறிப்பு. சராசரியா பறிப்புக்கு 100 கிலோனு வெச்சுக்கிட்டாலே மொத்தம் 10,500 கிலோ காய் கிடைக்கும். ஒரு கிலோ 6 ரூபாயில இருந்து 12 ரூபாய் வரைக்கும் விற்பனையாகுது.

சராசரியா 9 ரூபாய்னு வெச்சிட்டா 94,500 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதுல உரம், பூச்சிக்கொல்லினு செலவுகள் போக அரை ஏக்கர்ல 50,000 ரூபாய்க்கு குறையாம லாபம் கிடைக்கும்.

எல்லாம் சரி இந்த நாட்டு ரக கத்திரிக்காய்க்கு மக்களிடம் வரவேற்பு இருக்கிறது என்றகிறீர்கள். ஆனால், அதற்கு ரசாயன உரம் மற்றும் ரசாயன பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்திதானே விளைவிக்கிறீர்கள். உற்பத்தி செய்யும் உங்களுக்கும், அதை வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கும் அந்த ரசாயனங்கள் தீங்குதானே இழைக்கின்றன. நீங்கள் ஏன் இதை இயற்கை முறையில் சாகுபடி செய்யக்கூடாது. அதன் மூலம் விஷமற்ற காய்கறிகளை மக்களுக்கு விளைவித்துக் கொடுத்த புண்ணியம் கிடைக்குமே என்று கேட்டோம்.

அப்படி ஒண்ணு இருக்குனு கேள்விப்பட்டிருக்கோமே தவிர, மேற்கொண்டு அதைப் பத்தி எதுவும் தெரியாது. யாராவது இயற்கை விவசாயப் பயிற்சி கொடுத்தா நாங்களும் அதைச் செய்து பார்க்கத் தயாராத்தான் இருக்கோம் என்ற வெள்ளந்தியாகச் சொன்னார் ராயர்.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, வேலூர் மாவட்டம், தக்கோலம் பகுதியைச் சேர்ந்த முன்னோடி இயற்கை விவசாயி நீல சமபத்திடம் இந்த விஷயத்தைச் சொன்னோம்.

அரை ஏக்கர் நிலத்தில் கத்திரி சாகுபடி செய்ய ராயர் சொல்லும் செலவு -வரவுக் கணக்கு

| **விவரம்** | **செலவு** | **வரவு** |
|---|---|---|
| உழவு | 2,100 | |
| விதை | 400 | |
| நாற்றுத் தயாரிப்பு | 250 | |
| பார் பிடிக்க | 300 | |
| நடவு | 250 | |
| உரம் | 8,000 | |
| பூச்சிக்கொல்லி | 10,000 | |
| களை | 6,000 | |
| காய் பறிப்பு | 9,450 | |
| போக்குவரத்து | 6,000 | |
| கத்திரி விற்பனை மூலம் | | 94,500 |
| மொத்தம் | 42,750 | 94,500 |
| நிகர லாபம் | | 51,750 |

உடனே பயிற்சி கொடுப்பதற்கு அவர் சம்மதித்தார். ஒரு மாலை நேரத்தில் ராயரின் தோட்டத்தில் இயற்கை முறை கத்திரி சாகுபடி பயிற்சிக்கு ஏற்பாடு செய்தோம். விஷயத்தைக் கேள்விப்பட்ட பக்கத்துத் தோட்டத்து விவசாயிகளும் ஆர்வமாக பயிற்சியில் கலந்து கொண்டனர்.

**தொடர்புக்கு**

**ராயர், அலைபேசி: 99420-02207**

**நீலசம்பத் அலைபேசி: 99521-49407**

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 10.06.11 www.vikatan.com